### பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்த

# வியாபாரப் பொருட்களை டிபிகேஎல் பறிமுதல் செய்தது

கோலாலம்பூர், பிப்.9- தலைநகர், ஜாலான் துவாங்கு அப்துல் ராஹ்மான், ஜாலான் டாங் வாங்கி பகுதியில், பொது இடங்களில் வைக்கப்பட் டிருந்த வியாபாரப் பொருட்களை கோலாலம் பூர் மாநகர் மன்ற அதிகாரி கள் பறிமுதல் செய்தனர்.

பொது இடங்களில், இடையூறை ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட் டிருந்த மேசை, நாற்காலி உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

புகார்கள் பெறப்பட்டதை தொடர்ந்து புக்கிட் பிந்தாங் பிரிவு அமலாக்க அதிகாரி கள் இந்நடவடிக்கையில் இறங்கியதாக டிபிகேஎல்



வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

8 கடைகளுக்கு சொந்தமான பொருட்களை பறிமுதல் செய்ததோடு, 6 கடைகளுக்கு சம்மன் வெளியிடப்பட்டது.

அதோடு, பொது இடங்களில் இடையூறு ஏற்படுத்தாமல் வழங்கப்பட்ட இடத்தில் வியாபாரத்தை நடத்துமாறு அந்த அறிக்கை வாயிலாக வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.